**வாசிக்க**: **தானியேல்** 2:1-18

**ஆபத்து காலத்திலே என்ன செய்ய வேண்டும்**.?

பாபிலோன் ராஜாவாகிய நேபுகாத்நேச்சார் ஒருகனவை கண்டான். அதின் அர்த்தத்தை அறிய எல்லா ஞானிகள், மந்திரவாதிகளையும் அழைத்து, அவன் கண்ட கனவையும் அதின் அர்த்தத்தையும் அவர்கள் சொல்லவேண்டும் என கேட்டான். அதற்கு அவர்கள் ராஜா கேட்கிற காரியம் மிகவும் அரிது. பரலோகத்தின் தேவனை தவிர, ராஜாவிற்கு அதை அறிவிக்கத்தக்கவர் ஒருவரும் இல்லை என்றார்கள். இதினிமித்தம் ராஜா மகா கோபங்கொண்டு, பாபிலோனில் இருக்கிற எல்லா ஞானிகளையும் கொலைசெய்யும்படி கட்டளையிட்டான். ஞானிகளைக் கொலை செய்ய வேண்டுமென்கிற கட்டளை வெளிப்பட்ட போது, தானியேலையும் அவன் தோழரையும் கொலை செய்யத் தேடினார்கள். கொலை செய்யப் புறப்பட்ட அதிபதியாகிய ஆரியோகோடே தானியேல் ஞானமாய் பேசி, ராஜாவிற்கு சொப்பனத்தையும் அதின் அர்த்தத்தையும் சொல்ல தனக்கு தவணை கொடுக்குமாறு விண்ணப்பம்பண்ணினான். பின்பு தானியேல் தன் வீட்டுக்குப்போய், தானும் தன் தோழரும் பாபிலோனின் மற்ற ஞானிகளோடேகூட அழியாதபடிக்கு இந்த மறைபொருளை குறித்துப் பரலோகத்தின் தேவனை நோக்கி இரக்கம் கேட்டு ஜெபம் பண்ண அனனியா, மீஷாவேல், அசரியா என்னும் தன்னுடைய தோழருக்கு இந்தக் காரியத்தை அறிவித்தான்.

**கேள்வி**:

ராஜாவின் மடத்தனமான கேள்விக்கு பதில் சொல்ல, ஞானம் நிறைந்த தானியேலும் அவன் தோழரும் ஓடிப் போய் ஒளிந்து கொள்ளாமல், இப்படி ஜெபிப்பது சரியா?

**பதில்**:

ராஜா கேட்டது மடத்தனத்திற்கு கீழான கேள்விதான். ஆனால் அவனை அப்படி மடத்தனத்திற்கு தள்ளி கேட்க வைத்தது சாத்தான். சாத்தானின் முக்கிய திட்டம் எப்படியாவது தானியேலையும் அவன் தோழரையும் தேவன் உயர்த்துமுன் அழித்துவிடவேண்டும். அதை அறியாதவர்கள் பயந்துபோய் ஓடி ஒளிந்துகொள்ள பார்ப்பார்கள். ஆனால் தேவனால் ஆகாதது ஒன்றுமில்லை என அறிந்த தானியேல், காரியங்களை தேவனிடமிருந்து பெற்றுகொள்ளும் ஒரேவழி ஜெபம் என அறிந்திருந்ததால் தானே உடனே தோழரையும் அழைத்து ஜெபிக்கிறான். என்ன நடந்தது என நாளை தியானிப்போம். இன்று எனக்கு அருமையான தேவபிள்ளையே உன் வாழ்க்கையில் பிசாசு இப்படிபட்ட திட்டங்களை போட்டு உன்னை அழிக்க வரும்போது உடனே நீ என்ன செய்கிறாய்?

1) ஓடிபோய் ஒளிந்து கொள்கிறாயா?

2) எதிர்த்து நின்று போராடுகிறாயா?

3) தேவசமூகத்தில் போய் ஆலோசனை கேட்கிறாயா?

ஒருவேளை என்ன செய்யவேண்டும் என தெரியாவிட்டால், நாளைய தினத்தின் தியானத்தையும் பார்த்து விட்டு நீ தீர்மானிக்கலாம். ஆனால் எப்போதும் தேவனுக்கே முதலிடம் தர பழகிகொண்டால், வெற்றி பெறுவாய்.

ஆபத்துக்காலத்தில் என்னை நோக்கிக் கூப்பிடு, நான் உன்னை விடுவிப்பேன், நீ என்னை மகிமைப்படுத்துவாய். சங்கீதம் 50 :15

**ஜெபம்**

பரமண்டலங்களில் இருக்கும் பரலோக தகப்பனே. எங்கள் ஜெபங்களுக்கு பதில் தருவதற்கு நன்றியப்பா. ஜெப ஆவியால் எங்களை நிரப்புங்கப்பா. ஆமென்